[1987 ஏப்ரல் 7

சமையல் எண்ணெய்களுக்கு ஒருமுனை வரி விதித்தல்.

331—(*வினா எண் 8236) திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலை எண்ணெய், ரிபைண்டு, ஆயில், தேங்காய் எண்ணெய் போன்றவைகளுக்கு ஒருமுனை வரி விதிக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமுல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ). 17—3—1986 முதல் கடலை எண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய், தேங்காய் எண்ணெய் போன்ற தாவர எண்ணெய்களுக்கு இம்மாநிலத்தில் முதல் விற்பனை முனையில் 4 சதவீதம் ஒருமுனை விற்பனை வரி விதிக்கப்பட்டு, இன்றைய தினம் நடைமுறையிலே இருந்து வருகிறது.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒருமுனை வரி விதித்து இருப்பதாகச் சொன்னார்கள். மிக்க நன்றி. தேங்காய் எண்ணெய்க்கு ஒருமுனை வரி இருக்கிறது. ஆனால் தேங்காய்க்கு வரி கிடையாது. கடலை எண்ணெய்க்கு ஒருமுனை வரி என்னும்போது, கடலைப் பருப்புக்கு வரி இருக்கிறது. ஏதாவது ஒன்றுக்கு—கடலைப் பருப்புக்கு வரி இருந்தால், கடலை எண்ணெய்க்கு வரி நீக்கப்படுமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் அது பற்றி விவரம் சொல்லப்படும்.

மாநில வணிகவரி ஆலோசனைக் குழு.

332—(*வினா எண் 11211) திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில வணிகவரி ஆலோசனைக் குழு எப்போது கூட்டப்பட்டது?

(ஆ) அதன் பரிந்துரைகளில் அரசு ஏற்றுக்கொண்டவை எவை?

1987 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மாநில வணிகவரி ஆலோசனைக் குழு கடைசியாக 11—10—1983-ல் கூட்டப் பட்டது. ஆலோசனைக் குழு நடைபெற்ற நேரத்தில் உறுப்பினர் கள் எழுப்பிய பிரச்சினைகளுக்கு கூட்ட நேரத்திலேயே விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இருந்தாலும் மூன்று முக்கிய மான கோரிக்கைகள் சொல்லப்பட்டன: (1) தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959, பிரிவு 12 (5)-ன் கீழ் தண்டத் தொகை விதித்தல் சம்பந்தமாக; (2) வெல்லம், புளி, மிளகாய், தனியா, மஞ்சள் போன்றவற்றிற்கு ஒரு முனை வரி விதித்தல் சம்பந்தமாக; (3) சமையல் எண்ணெய் அறிவிக்கப்பட்ட பொருளாக வகைப்பாடு செய்தல்; இந்த மூன்று கோரிக்கைகளை யும் அரசாங்கம் அமல்படுத்தியிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில், இந்த வணிக வரி ஆலோசனைக் குழு 1983 ஆம் ஆண் டிலேதான் கடைசியாக நடத்தப்பட்டதாகச் சொன்னார்கள். அது கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக ஏன் நடத்தப்பட வில்லை? அதை ஒவ்வோர் ஆண்டும் இரண்டு, மூன்று முறையாவது நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவையி னுடைய தலைவர் அவர்களே, அந்தக் குழு 1983-லே இறுதியாகக் கூடி முடிவுகளை மேற்கொண்டிருக்கிறது. அதற்குப் பின்னாலே பல்வேறு சூழ்நிலைகளின் காரணமாக அந்தக் குழு அடிக்கடி கூட முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. அந்தக் குழுவினுடைய காலக் கெடு 31—3—1987 அன்று முடிவடைந்துவிட்டது. ஆகை யினால், அந்தக் குழுவை நியமித்து அல்லது புதுக் குழுவை உருவாக்கி, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல், ஆண்டுக்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை கண்டிப்பாகக் கூட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.